DEPOSITION OF WITNESS.
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. 2, SIVAKASI
Case No. CC 238/2019
**Depositions of PW 9**

| | | | |
|---|---|---|---|
| Name | டாக்டர் தனலட்சுமி | Caste | |
| Father's name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 6th Day of June 2025

Signature of Witness.

**06.06.2025**
(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)
**முதல் விசாரணை**

நான் தற்போது கன்னியாகுமரி அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியையாக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21-01-2019 ஆம் தேதி விருதுநகர் அரசு தலைமை மருத்துவமனையில் பணியில் இருந்தபோது காலை 10.35 மணிக்கு எரிச்சநத்தத்திலிருந்து பேரையூர் செல்லும் ரோட்டில் உள்ள முருகனேரி அருகே காலை 9.30 மணியளவில் விபந்து நடந்து செந்தில்குமார் வயது 35 த/பெ. தங்கமுடி என்பவர் 108 ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டார், அவரை பரிசோதித்துப் பார்த்ததில் அவர் மயக்க நிலையில் இருந்தார். அவரது வலது கால் எலும்பு முறிந்த நிலையில் காணப்பட்டது. வலது பாதம் கிழிந்த நிலையில் காணப்பட்டது. மூக்கு மற்றும் இடது காதில் இரத்தம் வழிந்த நிலையில் இருந்தது. வலது கண்

புருவத்தில் இரத்த காயம் காணப்பட்டது. அவருக்கு முதல் சிகிச்சை அளித்து மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு ராசாசி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தேன். நான் வழங்கிய **விபத்து பதிவேட்டு அறிக்கை அ.சா.ஆ.– 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னிடம் சிகிச்சைக்காக கொண்டுவரப்பட்ட நபர் வேறு ஏதேனும் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டு, பின்னர் விருதுநகர் அரசு தலைமை மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டாரா என்பதை என்னால் கூற இயலாது என்றால் சரிதான். காயம்பட்ட நபர் இருசக்கர வாகனத்தில் குறுகலான பாதையில் அதிவேகத்தில் செல்லும்போது தவறுதலாக விபத்து ஏற்பட்டால் மேற்படி காயங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்.

மறுவிசாரணை – இல்லை.